



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரபியுல் ஆகிர் பிறை 19 ஹிஜ்ரி 1437

Friday of Rabiyul Akhir 19th Hijri 1437

29th January 2016

| | |
|---|---|
| தலைப்பு: | ஸஹாபாக்களின் வரலாறு! |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | ஸஹாபாக்களின் வரலாறு! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். அவனுடைய நல்லடியார்கள் மீது அமைதி ஏற்படும். தன்னுடைய நபிக்காக அல்லாஹ் சிறந்த ஸஹாபாக்களை தேர்ந்தெடுத்துள்ளான். அந்த நபிக்கு பிறகு அந்த ஸஹாபா பெருமக்கள் சமுதாய தலைவர்களாக விளங்கினார்கள். இருளகற்றும் ஒளிவிளக்காக திகழ்கிறார்கள். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(48:26)

فَأَنْزَلَ اللَّهُ سَكِينَتَهُ عَلَى رَسُولِهِ وَعَلَى الْمُؤْمِنِينَ وَأَلْزَمَهُمْ كَلِمَةَ التَّقْوَى وَكَانُوا أَحَقَّ بِهَا وَأَهْلَهَا وَكَانَ اللَّهُ بِكُلِّ شَيْءٍ عَلِيمًا

“அச்சமயம் அல்லாஹ் தன்னுடைய தூதர் மீதும், நம்பிக்கை கொண்டவர்கள் மீதும், தன்னுடைய ஆறுதலையும், உறுதியையும் இறக்கி வைத்துப் பரிசுத்த வாக்கியத்தின் மீது அவர்களை உறுதிப்படுத்தினான். அவர்கள் அதற்குத் தகுதியுடையவர்களாகவும், அதனை அடைய வேண்டியவர்களாகவும் இருந்தார்கள். அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்”

**முஸ்லிம்களே**! எல்லாம் வல்ல ஏக இறைவன் ஒவ்வொரு நபிமார்களுக்கும் தோழர்களை தந்திருக்கிறான். அந்த தோழர்கள் உண்மையை நிலைநாட்டி, நேரான வழிகளை பகிரங்கமாக வெளிப்படுத்தி நிலையான ஓர் ஒத்துழைப்பை தந்துள்ளார்கள். அந்த நபியின் காலத்திற்கு பிறகு அந்த நபியின் ஷரீஅத் செய்திகளையும், வேதத்தின் கோட்பாடுகளையும் மற்ற மக்களுக்கு

எடுத்துச் சென்றார்கள். இந்த வழியில் எல்லாம் வல்ல அல்லாஹ் தன்னுடைய இறுதித்தூதர் கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிகச் சிறந்த புனிதர்களை ஸஹாபாக்களாக தந்துள்ளான். கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இந்த ஸஹாபாக்கள் மாபெரும் உதவியாகவும், உறுதுணையாகவும் இருந்துள்ளார்கள். மிகச் சிறந்த துணையாகவும், அதிக பாசம் கொண்டவர்களாகவும் விளங்கினார்கள். எனவேதான் இறைவன் அவர்களுக்கு பல்வேறு வகையான நன்மைகளை தருவதாக வாக்களிக்கிறான். அவர்களை முழுமையாக பொருந்திக் கொண்டு சுவனபதிகளையும் தருகிறான். இதனைப் பற்றி ஏக இறைவன் கூறுகிறான்: (9:100)

وَالسَّابِقُونَ الْأَوَّلُونَ مِنَ الْمُهَاجِرِينَ وَالْأَنْصَارِ وَالَّذِينَ اتَّبَعُوهُمْ بِإِحْسَانٍ رَضِيَ اللَّهُ عَنْهُمْ وَرَضُوا عَنْهُ وَأَعَدَّ لَهُمْ جَنَّاتٍ تَجْرِي تَحْتَهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا أَبَدًا ذَلِكَ الْفَوْزُ الْعَظِيمُ

"(முஹாஜிர்களிலும் அன்ஸார்களிலும் எவர்கள் (இஸ்லாமில்) முதலாவதாக முந்திக் (கொண்டு நம்பிக்கை) கொண்டார்களோ அவர்களையும் நற்செயல்களில் (மெய்யாகவே) இவர்களைப் பின்பற்றியவர்களையும் பற்றி அல்லாஹ் திருப்தியடைகின்றான். இவர்களும் அல்லாஹ்வைப் பற்றி திருப்தியடைகின்றனர். அன்றி, தொடர்ந்து நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் சுவனபதிகளை இவர்களுக்கென தயார்படுத்தி வைத்திருக்கின்றான். அவற்றிலேயே அவர்கள் என்றென்றும் தங்கிவிடுவார்கள். இதுதான் மகத்தான பெரும் வெற்றியாகும்"

கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பிறகு வாழ்ந்த இந்த ஸஹாபாக்கள்தான் மிகச் சிறந்த சமூகத்தினர். மற்ற மனிதர்களை விட அதிக அறிவுஞானம் பெற்றவர்கள். நல்ல உள்ளம் படைத்தவர்கள். அதிகமான துயரங்களையும் அனுபவித்தவர்கள். சொல்லாலும் செயலாலும் உண்மையாக வாழ்ந்தவர்கள். ((464/1) : تفسير ابن كثير)

இவ்வுலக வாழ்வில் பற்றற்ற தன்மையோடு முழுமையான இறைநேசர்களாக வாழ்ந்துள்ளார்கள். தங்களின் வாழ்வியல் மூலம் மனிதர்களுக்கு சிறந்த அறிவுரையை வழங்கியுள்ளார்கள். தங்களின் மரணத்திற்கு பிறகும் இந்த மனித குலத்திற்கு மிகப் பெரும் முன்னோடியாகவும், படிப்பினையாகவும் திகழ்கிறார்கள். (مروج الذهب ومعادن الجوهر للمسعودي : (75/3) والقائل عبد الله بن عباس رضي الله عنهما)

கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஸஹாபாக்களை மிகவும் அழகிய முறையில் பண்படுத்தியுள்ளார்கள். எனவேதான் இந்த ஸஹாபாக்கள் மிகவும் தூய எண்ணத்துடன் உண்மையாக வாழ்ந்துள்ளார்கள். கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

خَيْرُ النَّاسِ قَرْنِي

"மக்களில் சிறந்தவர்கள் என் தலைமுறையினர்(متفق عليه )

மிகவும் இக்கட்டான நிலையில் அந்த மரத்திற்கு கீழ் இருந்து கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அனைத்து ஸஹாபாக்களும் பைஅத் செய்துள்ளார்கள். இதனால் அவர்களின் பெருமையும் புகழும் ஓங்கியது. அல்லாஹ்

அவர்களுக்கு நற்பாக்கியங்களை வழங்கினான், முழுமையாக பொருந்திக் கொண்டான். இந்த நிகழ்விற்கு “பைஅத்துர் ரிள்வான்” என்றழைக்கப்படுகிறது. ஏக இறைவன் இதனைப்பற்றி கூறுகிறான்: (48:18)

لَقَدْ رَضِيَ اللَّهُ عَنِ الْمُؤْمِنِينَ إِذْ يُبَايِعُونَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِي قُلُوبِهِمْ فَأَنْزَلَ السَّكِينَةَ عَلَيْهِمْ وَأَثَابَهُمْ فَتْحًا قَرِيبًا

“அந்த மரத்தினடியில் உங்களிடம் கைகொடுத்து வாக்குறுதி செய்த நம்பிக்கையாளர்களைப் பற்றி நிச்சயமாக அல்லாஹ் திருப்தியடைந்தான். அவர்களின் உள்ளங்களிலிருந்த (உண்மையான தியாகத்)தை நன்கறிந்து, சாந்தியையும், ஆறுதலையும் அவர்கள் மீது சொரிந்தான். உடனடியான ஒரு வெற்றியையும் (கைபர் என்னும் இடத்தில்) அவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்தான்”

இந்த ஸஹாபாக்கள் மிகவும் சத்திய சீலர்களாகவும், வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களாகவும் இருந்தார்கள். தூய்மையும், தெளிவும் கொண்டவர்கள். இந்த ஸஹாபாக்களின் சிறப்புகளை நாம் அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்று கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்:

لاَ تَسُبُّوا أَصْحَابِي، فَوَالَّذِي نَفْسِي بِيَدِهِ لَوْ أَنَّ أَحَدَكُمْ أَنْفَقَ مِثْلَ أُحُدٍ ذَهَبًا مَا أَدْرَكَ مُدَّ أَحَدِهِمْ وَلاَ نَصِيفَهُ

“என் தோழர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தைத் தர்மம் செய்தாலும் (என் ஸஹாபாக்களான) அவர்கள் (இறை வழியில்) தர்மம் செய்த இரண்டு கைக் குவியல் அல்லது அதில் பாதியளவைக் கூட (அவரின்) அந்த தர்மம் எட்டி விட முடியாது(متفق عليه )

அதாவது ஒருவரிடம் உஹத் மலையளவு தங்கம் இருக்கிறது அவை அனைத்தையும் இறைவனுடைய வழியில் தர்மம் செய்கிறார். என்ற போதிலும் என்னுடைய ஸஹாபாக்களின் ஒரு கையளவு தர்மத்திற்கு கிடைக்கும் நன்மையை பெற்றுவிட முடியாது. (321/8 : شرح النووي على مسلم)

**அல்லாஹ்வுடைய அடியார்களே!** முஹாஜிர் மற்றும் அன்சாரி ஸஹாபாக்களில் மிகவும் உன்னதமானவர்கள் யாரெனில் சொர்க்கத்தைக் கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட பத்து ஸஹாபாக்கள், பிறகு பத்ர் போரில் கலந்து கொண்ட ஸஹாபாக்கள். பிறகு உஹத் யுத்தத்தில் கலந்து கொண்ட ஸஹாபாக்கள், பிறகு பைஅத்துல் ரிள்வானில் இடம்பெற்ற ஸஹாபாக்கள், அதற்கு அடுத்தபடியாக அனைத்து ஸஹாபாக்களும் சிறப்பிற்குரியவர்கள். எல்லாம் வல்ல இறைவன் இந்த அனைத்து ஸஹாபாக்களுக்கும் சொர்க்கத்தை தருவதாக வாக்கு கொடுத்துள்ளான்: (57:10)

وَكُلًّا وَعَدَ اللَّهُ الْحُسْنَى وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ

“எனினும், இரு சாராருக்கும் அல்லாஹ் நன்மையையே வாக்களித்திருக்கின்றான். அல்லாஹ் நீங்கள் செய்பவைகளை நன்கறிந்தவனாக இருக்கின்றான்”

சொர்க்கத்தைக் கொண்டு முதன் முதலில் நன்மாராயம் கூறப்பட்ட மிகப் பெரிய ஸஹாபி, நமது தலைவர் அபூபக்ர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்தாம். இந்த ஸஹாபிதான் முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்ற ஆண் ஸஹாபி ஆவார்கள். கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணுலக பயணம் சென்று வந்ததை எந்தவித மன ஊசலாட்டமும் இல்லாமல் முழுவதுமாக நம்பி அதனை உண்மை என்று ஏற்றுக் கொண்டார்கள். எனவேதான் இப்படி உடனடியாக உண்மைப் படுத்தியதால் “ஸித்தீக்” எனும் “உண்மையாளர்” என்கிற சிறப்பு புனைப்பெயரை பெற்றார்கள். மற்ற எல்லா மனிதர்களை விடவும் கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஸஹாபியைத்தான் அதிகம் நேசித்தார்கள்.

ஒருமுறை, “மனிதர்களிலேயே உங்களுக்கு யார் மிக அதிக பிரியமுள்ளவர்? என்று கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு, “ஆயிஷா என்று பதிலளித்தார்கள். மறுபடியும், “ஆண்களில் யார் பிரியமானவர்? என்று கேட்கப்பட்டது. அதற்கு, “ஆயிஷாவின் தந்தை (அபூபக்ர்) என்று பதிலளித்தார்கள். ( متفق عليه)

நாம் இன்று தினசரி ஓதி வரும் இறைவேதம் நமது கைகளில் ஒரே வேதமாக தொகுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேதத்தை தொகுத்துக் கொடுத்தது ஹஜ்ரத் அபூபக்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களாவார்கள். மிக உறுதியான நம்பிக்கையோடு இருப்பது, அச்சமற்ற நிலையை உருவாக்குவது, அனைவரும் ஓரணியில் திரண்டு அமைதியை நிலைநிறுத்துவது போன்ற அனைத்திற்கு இந்த ஸஹாபி சிறந்த முன்னோடியாக திகழ்கிறார்கள். பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும், நம்பக தன்மையை காப்பாற்றுவதிலும், பாதுகாப்பான சூழலை உருவாக்கி அமைதியை நிலைப்படுத்துவதிலும், இறைவனின் ஏகத்துவ கொள்கையை உறுதிபட நம்புவதிலும் இந்த ஸஹாபி மிகப்பெரிய வழிகாட்டியாக இருக்கிறார்கள்.

**தொழுகையாளிகளே**! சிறப்பிற்குரிய ஸஹாபாக்களின் வரிசையில் அடுத்ததாக நம்முடையை தலைவர் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இருக்கிறார்கள். கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

اقْتَدُوا بِاللَّذَيْنِ مِنْ بَعْدِي: أَبِي بَكْرٍ وَعُمَرَ

“எனக்கு பிறகு உள்ள இருவரை நீங்கள் பின்பற்றி நடங்கள், ஒருவர் அபூபக்ர் மற்றொருவர் உமர் (الترمذي : 3662 ، وابن ماجه: 97)

இந்த ஸஹாபியும் சொர்க்கத்தை கொண்டு சோபனம் சொல்லப்பட்ட பத்து ஸஹாபாக்களில் ஒருவராவார். இந்த ஸஹாபி இஸ்லாத்தை ஏற்றதால் முஸ்லிம்களுக்கு பெரிதும் கௌரவமாக அமைந்தது. இவர்கள் இஸ்லாத்தை ஏற்ற பிறகுதான் ஏகத்துவ செய்தியை மிக பகிரங்கமாக இஸ்லாமியர்கள் பரப்பினார்கள். சத்தியத்தையும் அசத்தியத்தையும் தெளிவாக பிரித்துக்



www.sunnathwaljamath.com

கூறியதால் “பாரூக்” எனும் ‘பிரித்தறிபவர்’ என்கிற சிறப்பு புனைப்பெயரை பெற்றார்கள். இவர்களின் மகளாகிய உம்முல் முஃமினீன் ஹப்ஸா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மணமுடித்துக் கொண்டார்கள். ஹஜ்ரத் அலி இப்னு அபூதாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மகளாகிய உம்முகுல்ஸூம் ரலியல்லாஹு அன்ஹா அவர்களை இந்த உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மணமுடித்துக் கொண்டார்கள். (1955/4 :الاستيعاب في معرفة الأصحاب)

இந்த உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றி, “நான் அறிந்தவரையில் புறத்தோற்றத்தில் தெரிவதைக் காட்டிலும் மறைமுகமாக அவர்கள் மிகச் சிறந்த மனிதராக திகழ்கிறார்கள். அவர்களுக்கு ஈடாக எங்களில் யாரும் இல்லை” என்று ஹஜ்ரத் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.((68/2) : تاريخ الإسلام للذهبي )

ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை இறைவன் பொருந்திக் கொண்டான். அறிவார்ந்த பல நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக இருக்கிறார்கள். நேர்மையாக நிர்வாகம் செய்வது, நியாயமாக தீர்ப்பு வழங்குவது, கொண்ட கொள்கையில் மன உறுதியுடன் இருப்பது என பல வகையில் நமக்கெல்லாம் முன்னோடியாக வாழ்ந்துள்ளார்கள்.

**அல்லாஹ்வின் அடியார்களே**! மூன்றாவதாக ஹஜ்ரத் உஸ்மான் இப்னு அப்பான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்புகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்ற சிறப்பிற்குரிய மேலும் சொர்க்கத்தை கொண்டு சோபனம் கூறப்பட்ட ஸஹாபியாவார்கள். பைஅத்துல் ரிள்வான் போது இவர்கள் சார்பாக கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே பைஅத் செய்தார்கள். அதிக வெட்க உணர்வு உள்ளவர்கள். இவர்களை கண்டு மலக்குமார்களே வெட்கப்படுவார்கள். கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَلاَ أَسْتَحِي مِنْ رَجُلٍ تَسْتَحِي مِنْهُ الْمَلاَئِكَةُ

“எந்த மனிதரைக் கண்டு மலக்குமார்களே வெட்கப்படுகிறார்களோ அவரைக் கண்டு நான் வெட்கப்பட மாட்டேனா? (6362 : مسلم)

கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய மகள் ருகைய்யா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். அந்த பெண்மணி இறந்தவுடன் உம்மு குல்ஸூம் ரலியல்லாஹு அன்ஹா அவர்களை மணமுடித்துக் கொடுத்தார்கள். இதனால் “துன்னூரைன்” எனும் “இரு ஒளியை கொண்டவர்கள்” என்கிற சிறப்பு புனைப்பெயரை உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பெற்றார்கள். முதன் முதலில் ஹிஜ்ரத் பயணம் செய்த குழுவில் இவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். சமூக சேவை செய்வதில் சிறந்த முன்னோடியாக திகழ்கிறார்கள். சிக்கல் ஏற்படும் சமயத்தில் தாமாகவே முன்வந்து சமூதாய பணிகளை செய்து கொடுப்பார்கள். “ரூமா” என்கிற கிணற்றை வாங்கி சமூக பயன்பாட்டிற்கு தர்மம் செய்துள்ளார்கள். ஒருமுறை கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:


www.sunnathwaljamath.com

مَنْ يَزِيدُ فِي مَسْجِدِنَا هَذَا بِبَيْتٍ فِي الْجَنَّةِ؟

“யார் நம்முடைய இந்த பள்ளிவாசலை விரிவாக்கம் செய்ய உதவுகிறாரோ நிச்சயம் அவருக்கு (மறுமை நாளில்) சொர்க்கத்தில் ஒரு வீடு கிடைக்கும்” என்று கூறியவுடனேயே உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முன்வந்து பெருமளவு நிதியுதவி செய்தார்கள். ( السنة لابن أبي عاصم : 1309)

ஒரு சமயத்தில் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஆயிரம் தீனார்(தங்க காசு)களை ஒப்படைத்தார்கள். அப்போது கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிவருமாறு நற்செய்தி கூறி பாராட்டினார்கள்:

مَا ضَرَّ عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ اليَوْمِ

“இந்த நாளிற்கு பிறகு உஸ்மான் எதைச் செய்தாலும் அதனால் அவருக்கு எந்த பாதிப்பும் வராது” (الترمذي:3702)

**முஸ்லிம்களே**! அலி இப்னு அபூதாலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சிறப்பும் மேன்மையும் வாய்ந்த ஸஹாபியாக இருக்கிறார்கள். இந்த ஸஹாபி கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தந்தையின் சகோதரருடைய மகனார். சொர்க்கத்தை கொண்டு நன்மாராயம் கூறப்பட்ட பத்து ஸஹாபாக்களில் இவர்களும் ஒருவர். இஸ்லாத்தை ஏற்ற முதல் வாலிப ஸஹாபி. அண்ணல் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தவப்புதல்வி அன்னை பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை திருமணம் செய்து கொண்டார்கள். அபூபக்ர் மற்றும் உமர் ரலியல்லாஹு அன்ஹுமா உள்ளிட்ட அனைத்து ஸஹாபாக்களிடமும் கண்ணியமும் மரியாதையும் வைத்திருந்தார்கள். குறிப்பாக இந்த இருபெரும் ஸஹாபாக்களின் தனிச் சிறப்புகளை நன்கு உணர்ந்திருந்தார்கள்.

முஹம்மது இப்னு ஹனபீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வரும் நிகழ்வை அறிவிக்கிறார்கள்: நான் என் தந்தை அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம், “நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகு மனிதர்களில் யார் மிகவும் சிறந்தவர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், “அபூ பக்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்" என பதிலளித்தார்கள். நான், “(அவர்களுக்குப்) பிறகு யார்?” என்று மறுபடியும் கேட்டேன். அதற்கு அவர்கள், “பிறகு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (தாம் சிறந்தவர்)" என்று பதிலளித்தார்கள். “பிறகு (மனிதர்களில் சிறந்தவர்) உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தாம்" என்று (என் தந்தை) சொல்லிவிடுவார்களோ என நான் அஞ்சியவனாக, “பிறகு (மனிதர்களில் சிறந்தவர்) தாங்கள் தானே!" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், “நான் ஒரு சாதாரண முஸ்லிம், அவ்வளவுதான்" என்று தன்னடக்கத்துடன் பதிலளித்தார்கள்.(3671 :البخاري )

ஹஜ்ரத் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் ஏற்பட்ட பல சிக்கல்களுக்கு அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தீர்வு தந்தார்கள். ஹஜ்ரத் உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பல்வேறு வகையில் உறுதுணையாக இருந்தார்கள். மிகவும் வீர தீரத்துடன் இருந்ததோடு, பல அறிவார்ந்த ஆலோசனைகளையும், தீர்ப்புகளையும் வழங்கியுள்ளார்கள். குழப்பங்கள் செய்து கொண்டு இஸ்லாத்தை விட்டு வெளியேறிய கவாரிஜிய்யாக்களுக்கு பலத்த அடி கொடுத்தார்கள். மொத்த சமூகத்தையும் காப்பதற்கு கடுமையாக உழைத்தார்கள்.

சொர்க்கத்தை கொண்டு சோபனம் கூறப்பட்ட ஸஹாபாக்கள் மொத்தம் பத்து பேர். மேலே குறிப்பிடப்பட்ட நான்கு பெரிய ஸஹாபாக்களும் பின்வரும் ஆறு ஸஹாபாக்களும் அடங்குவார்கள். தல்ஹா, ஜுபைர், அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப், ஸஅத் இப்னு அபூவக்காஸ், ஸயீது இப்னு ஜைத், அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களாவார்கள். இவர்கள் அனைவரும் தனி சிறப்பும், மேன்மையும், கண்ணியமும் உடையவர்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனி சிறப்புமிக்க தியாக வரலாறு இருக்கிறது. எல்லாம் வல்ல ஏக இறைவன் இவர்கள் அனைவரையும் பொருந்திக் கொண்டுள்ளான்.

யா அல்லாஹ்! உன்னுடைய நபியை அதிகமாக நேசிக்கும் பாக்கியத்தை நீ எங்களுக்கு தருவாயாக! ஸஹாபா பெருமக்களை நேசிக்கும் பாக்கியத்தையும் தருவாயாக!!!

**தொழுகையாளிகளே**! இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் மேலும் கண்மணி நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டும், அவர்களுடைய ஸஹாபாக்களின் வாழ்க்கை வரலாற்றையும் நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

அவர்களின் நேசத்தையும், தனிச்சிறப்புகளையும், உயரிய படிப்பினைகளையும் நாம் அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர்களை நாம் பின்பற்றி நடக்க வேண்டும். அவர்களின் வீரதீரத்தை நாம் படிப்பினையாக கொள்ள வேண்டும். அவர்களின் நடுநிலையும், நியாயமான அணுகுமுறையையும் நாம் படிப்பினையாக கொள்ள வேண்டும். அவர்கள் அனுபவித்த கடும் சோதனைகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். உள்ளத்தில் என்றும் மிக நிம்மதியான உணர்வை அவர்கள் பெற்றதை போன்று நாம் பெற முயற்சிக்க வேண்டும். சமுதாய மக்களிடம் அவர்கள் காட்டிய இணக்கமும், பாசமான அணுகுமுறையும், அரவணைப்பு சிந்தனையும் நம்மிடமும் ஏற்பட வேண்டும். ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புடன் வாழ்ந்து வந்தார்கள். ஒருவர் மற்றவரின் கௌரவத்தையும், மரியாதையையும் நன்கு புரிந்து வைத்திருந்தனர். ஒருவர் மற்றவருக்கு கொடுக்க வேண்டிய கண்ணியத்தை குறைவில்லாமல் கொடுத்தார்கள். ஒருவருக்கொருவர் அன்புடனும், பாசத்துடனும் இணக்கமாக வாழ்ந்தார்கள். இதனைப் பற்றி இறைவன் கூறுகிறான்: (48:29)

رُحَمَاءُ بَيْنَهُمْ

“தங்களுக்குள் மிக்க அன்புடையவர்களாகவும் இருந்தார்கள்”

இந்த ஸஹாபாக்களின் நேசத்தை நமது உள்ளத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய பிள்ளைகளுக்கும் இந்த நேசத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். இந்த ஸஹாபாக்களின் பெயர்களை நம்முடைய பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். இந்த பெருமக்களுக்காக துஆச் செய்யும் பழக்கத்தையும் நம் பிள்ளைகளிடம் உருவாக்க வேண்டும். கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பிறகு பின்பற்றத்தக்கவர்கள் இந்த ஸஹாபாக்கள்தான் என்பதை நம்முடைய பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும். கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றும் ஸஹாபாக்களின் சொல் செயல் அங்கீகாரத்தை உள்ளடக்கியதுதான் நமது இஸ்லாமிய ஷரீஅத் என்பதை நம்முடைய பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இப்னு அப்துல்பர் அல்மாலிகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்: கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஸஹாபாக்களின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் கண்டிப்பாக தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதில் உலமாக்களிடம் மாறுபட்ட இரு வேறு கருத்துகள் இல்லை. பொதுவாக ஒவ்வொரு நபிமார்களுக்கும் தோழர்கள் உண்டு, அந்த தோழர்களை ஒதுக்கிவிட்டு எந்த ஷரீஅத் சட்டமும் முழுமை பெறாது. எனவே நபிமார்களின் தோழர்களையும் உள்ளடக்கினால்தான் ஒரு ஷரீஅத் அமைப்பு முழுமை பெறும் என்று கருதுகிறேன். காரணம் இந்த ஸஹாபாக்கள்தான் ஓர் உம்மத்திற்கும் அந்த உம்மத்தின் இறைதூதருக்கும் தொடர்பு பாலமாக இருக்கிறார்கள். ( الاستيعاب في معرفة الأصحاب (19/1))

இந்த ஸஹாபாக்களின் நேசத்தை மனித உள்ளங்களில் விதைத்து அதனை வளர்ப்பதற்கு நமது நீதமான அரசு பெரும் முனைப்புடன் செயல்படுகிறது. பல்வேறு வகையான விளக்க உரைகள், கருத்தரங்குகள், விரிவுரைகள் போன்றவைகள் மூலம் ஸஹாபாக்களின் உணர்ச்சிமிக்க வரலாற்றை பரப்புகிறது. அதுமட்டுமல்ல அவதூறு பரப்ப கூடாது, எந்த ஒரு தனி சித்தாந்தங்களுக்கு எதிராக விஷமத்தை பரப்ப கூடாது, நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த கூடாது போன்ற அம்சங்களை உள்ளடக்கி தனிச்சிறப்பு வாய்ந்த சட்டங்களை இந்த அரசு இயற்றியுள்ளது. எனவே இதனடிப்படையில் யாரும் நபிமார்கள், அவர்களின் குடும்பத்தினர்கள், அவர்களின் தோழர்கள் உள்ளிட்ட யாரையும் தவறாகவும், கண்ணியக்குறைவாகவும் பேசவோ எழுதவோ கூடாது.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلَاةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ்! உன்னுடைய நபியின் நேசத்தை எங்களுக்கு தருவாயாக!! ஸஹாபாக்களின் நேசத்தையும் எங்களுக்கு நீ தருவாயாக, அனைத்து கலீபாக்களையும் நேசிக்கும் பாக்கியத்தையும், மற்ற அனைத்து ஸஹாபாக்களையும் நேசிக்கும் பாக்கியத்தையும் எங்களுக்கு நீ தருவாயாக!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக,

நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).